செ.வெ.எண்: 496/2017 நாள்: 06.10.17

**நெல் உற்பத்தி திறனை பாதிக்கும் புகையான்**

**விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அறிவுரை**

தமிழகத்தில் சம்பா பருவ நெல் சாகுபடி காலம் துவங்கி உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்துள்ளது. இந்த மாதம் துவங்கவுள்ள வடகிழக்குபருவ மழையும் கை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், சம்பா சாகுபடிக்கான ஏற்பாடுகளில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அதே நேரத்தில் நெல் பயிரினைக் காக்கும் பூச்சிகளைப்பற்றி விவசாயிகள் நன்கு அறிந்திருக்க வேண்டும். நெல் பயிரைத்தாக்கும் பூச்சிகளில் முக்கியமான ஒன்று புகையான் (நிலபர்வட்டா லூகன்ஸ்) நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் புகையானின் இளம் குஞ்சுகளும் மற்றும் முதிர்பூச்சிகளும் ஒட்டிக் கொண்டிருக்கும். புகையானால் தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்த மாதிரி" காட்சியளிக்கும் முதிர்ச்சியடைந்த நிலையில் பயிர்கள் காய்ந்து வட்டமான திட்டுகளாகக் காணப்படும். இறுதியாக பயிர்கள் சாய்ந்து விடும்.

இதனை கட்டுப்படுத்த நெருக்க நடவு முறையைத் தவிர்த்து 30 செ.மீ அளவுக்கு கலவன் பாதை விட்டு நடவு செய்ய வேண்டும். இந்த பழுப்பு தத்துப்பூச்சியின் வளர்ச்சிக்குறைவதற்கு தழைச்சத்து உரத்தை பிரித்திடுதல் வேண்டும். விளக்கு பொறி அமைத்தும் புகையானை கவர்ந்து அழிக்கலாம். வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பிறகு நேரிடையாக பாஸ்போமிடான் 1000 மிலி (அ) மோனோகுரோட்டாபாஸ் 1250 மிலி (அ) பாஸ்போன் 1500 மிலி / எக்டர் மருந்தை நேரிடையாக தூர்களின் அடிப்பகுதியில் தெளிக்க வேண்டும்.

மேலும், வேப்பெண்ணை 3 சதவீதம் 15 லிட் / எக்டர் (அ) வேப்பங்கொட்டைச்சாறு 5 % 25 கிலோ கிராம் / எக்டர் தெளித்தும் புகையானை கட்டுப்படுத்தலாம் என வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

6/10/17

வேளாண்மை இணை இயக்குநர்,
காஞ்சிபுரம்.